

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 9.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஜாபில் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் முதலீட்டில் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளியில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி.அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஜாபில் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் மேட் கிரவுலி, முதுநிலை இயக்குநர் நித்து சின்கா மற்றும் பி.ஜெ. ஃபேரன்காப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 9.9.2024 அன்று அமெரிக்க நாட்டின் சிகாகோவில், ஆட்டோடெஸ்க் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு, ஆட்டோடெஸ்க் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் ஜெப் கிண்டர், துணைத் தலைவர் கென் ஃபூ மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# திருச்சி - காஞ்சிக்கு 2,666 கோடி ரூபாய் புதிய முதலீடுகள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

உற்பத்தி நிறுவனங்களை கொண்டுள்ளது. ஜாபில் நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

### ஜாபில் நிறுவனத்துடன் புரிந்துணர்வு

**முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஜாபில் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 2000 கோடி ரூபாய் முதலீட்டில் 5000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திருச்சிராப்பள்ளியில் மின்னணு உற்பத்தி நிறுவனம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் ஜாபில் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் மேட் கிரவுலி, முதுநிலை இயக்குநர் நித்து சின்கா மற்றும் பி.ஜெ. ஃபேரன்காப் ஆகியோர் பங்கேற்றனர்.**

### ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனம் (Rockwell Automation)

ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனமானது, தொழிற்துறை ஆட்டோமேஷன் மற்றும் டிஜிட்டல் மாற்றத்திற்கான (Industrial Automation and Digital transformation) உலகின் மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றாகும். இந்நிறுவனத்தின் கார்ப்பரேட் தலைமையகம் அமெரிக்க நாட்டின் விஸ்கான்சின்னிலுள்ள மில்வாக்கியில் அமைந்துள்ளது. இந்நிறுவனம் பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

### ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

**முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே 666 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரத்தில் மின்னணு உற்பத்தி நிறுவன விரிவாக்கத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில், ராக்வெல் ஆட்டோமேஷன் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மை செயல் அலுவலர் பிளேக் மோரெட், முதுநிலை துணைத் தலைவர் ராபர்ட் பட்டர்மோர், துணைத் தலைவர் எட்வர்ட் மோர்லான்டு, இயக்குநர் முத்துகுமரன் பிச்சை ஆகியோர் பங்கேற்றனர்.**

### ஆட்டோடெஸ்க் நிறுவனம் (Autodesk)

ஆட்டோடெஸ்க் நிறுவனமானது ஒரு அமெரிக்க பன்னாட்டு நிறுவனமாகும். இந்நிறுவனம் கட்டடக்கலை, பொறியியல், கட்டுமானம், உற்பத்தி, ஊடகம், கல்வி மற்றும் பொழுதுபோக்குத் தொழில்களுக்கான மென்பொருள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்கி வருகிறது. ஆட்டோடெஸ்க் நிறுவனத்தில் உலகளவில் 14,000 ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இது ஒரு பார்ச்சூன் 500 நிறுவனங்களில் ஒன்றாகும்.

### ஆட்டோடெஸ்க் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது

**முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் ஆட்டோடெஸ்க் நிறுவனத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் இடையே தமிழ்நாட்டு இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துவதற்காகவும்,**

**குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSME) மற்றும் ஸ்டார்ட்அப்கள் உள்ளிட்ட தொழில்துறை சுற்றுச்சூழல் அமைப்புகளில் போட்டித்தன்மையை மேம்படுத்து வதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்வில் ஆட்டோடெஸ்க் நிறுவனத்தின் செயல் துணைத் தலைவர் ஜெப் கிண்டர், துணைத் தலைவர் கென் ஃபூ ஆகியோர் பங்கேற்றனர்.**

இந்நிகழ்வின்போது, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை செயலாளர் வி. அருண் ராய், தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் வே. விஷ்ணு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

‘சமக்ர சிக்ஷா’ நிதியை தேசிய கல்விக் கொள்கை உடன்பாட்டுடன் இணைப்பது – கல்வி தொடர்பாக

# மாநில அரசுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சுயாட்சியை மீறுவதாகும்!

## பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி – ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு பதில்!



**சென்னை, செப். 12 –**

**‘சமக்ர சிக்ஷா’ நிதியை தேசிய கல்விக் கொள்கை உடன்பாட்டுடன் இணைப்பது – கல்வி தொடர்பாக மாநில அரசுக்கு அரசமைப்பு வழங்கயுள்ள சுயாட்சியை மீறுவதாகும் – என, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி விடுத்துள்ள அறிக்கையில், ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு விளக்கமளித்துள்ளார்.**

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு அளித்துள்ள பதில்கள்

**அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களின் கனிவான கவனத்திற்கு ...!**

1930-கள் மற்றும் 60-களின் வரலாற்று இயக்கங்களில் வேரூன்றிய இருமொழிக் கொள்கையின் வாயிலாகத் தமிழ்நாடு தன்னுடைய மொழியியல் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் எப்போதும் உறுதியாக இருந்து வருகிறது. தமிழை எங்களுடைய அடையாளத்தின் தூணாக ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் எதிர்காலத் தலைமுறையினர் ஆங்கிலப் புலமை பெறுவதையும் நாங்கள் உறுதிசெய்கிறோம்.

**கேள்வி ஒன்றுக்கான பதில்:**

எங்களுடைய கொள்கை எப்போதும் தமிழை அடிப்படையாகக் கொண்டு, அனைத்தையும் உள்ளடக்கிய கற்றலுக்கு முன்னுரிமை அளித்துவரும் அதேவேளையில், மாணவர்களுடைய ஆங்கில அறிவையும் மேம்படுத்துகிறது.

**கேள்வி இரண்டுக்கான பதில்:**

எங்களுடைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், வேலைவாய்ப்பில் சம நிலையினை உருவாக்கிட போட்டித் தேர்வுகளைத் தமிழில் நடத்த வேண்டும் என ஒன்றிய அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார்.

**கேள்வி மூன்றுக்கான பதில்:**

பொறியியல், மருத்துவம் போன்ற தொழில்நுட்பப் பாடங்களைக்கூட மொழி பெயர்த்து, தமிழில் கற்றல் கருவிகளை வெளியிடுவதில் தமிழ்நாடு முன்னணி வகித்துவருகிறது.

**கேள்வி நான்கிற்கான பதில்:**

தமிழ்நாட்டின் கொள்கைகள் ஏற்கெனவே முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண், நான்முதல்வன், இல்லம் தேடிக் கல்வி, தமிழ்ப் புதல்வன், எண்ணும் எழுத்தும் போன்ற திட்டங்களின் வாயிலாக முழுமையான மற்றும் உள்ளடக்கிய பண்புகளைப் பிரதிபலிக்கின்றன. இவை, தேசியக் கல்விக் கொள்கைக்கு முந்தையவை மற்றும் அதன் இலக்குகளுடன் பொருந்திச் செல்பவை.

இறுதியாக, தமிழ்நாடு ஏற்கெனவே தன்னுடைய சொந்த முன்னெடுப்புகளின் வாயிலாக, தேசியக் கல்விக் கொள்கையின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல் வேறு அம்சங்களையும் செயல்படுத்திவருகிறது. இருப்பினும், மும்மொழிக் கொள்கை, பாடத்திட்ட மாற்றங்கள் போன்ற குறிப்பிட்ட அம்சங்களைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம்.

‘சமக்ர சிக்ஷா’ நிதியைத் தேசிய கல்விக் கொள்கை உடன்பாட்டுடன் இணைப்பது, கல்வி தொடர்பாக மாநில அரசுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சுயாட்சியை மீறுவதாகும்.

எனவே, தேசிய கல்விக் கொள்கையுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் இல்லாமல் ‘சமக்ர சிக்ஷா’ திட்டத்தின்கீழ் நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்க வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.



திருப்பூர் வடக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் உரிமை சீட்டு வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஈ.தங்கராஜ் தலைமையில், தெற்கு மாநகர அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ் வரவேற்புரையில் நல்லூர் பகுதி செயலாளர் மேங்கோ அ.பழனிச்சாமி, நல்லூர் மண்டலத் தலைவர் சி.கோவிந்தசாமி, வடக்கு மாநகர அமைப்பாளர் சு.முத்துக்குமார், பகுதி துணை செயலாளர் க.நாகராஜ் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் உறுப்பினர் உரிமை சீட்டுக்களை கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், மாவட்டக் கழக செயலாளர்கள், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், கழக இளைஞர் அணி துணைச் செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈ.பிரகாஷ் வழங்கினர். இதில் மாநகர செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன் (தெற்கு) மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் (வடக்கு) உள்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்த

# சென்னையைச் சேர்ந்த ஐவரின் குடும்பத்திற்கு தலா ரூ.2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை, செப். 12 -

சென்னையைச் சேர்ந்த ஐந்து இளைஞர்கள் தஞ்சாவூர் மாவட்டம் கொள்ளிடம் ஆற்றில் மூழ்கி உயிரிழந்தனர். அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

அது பற்றிய விவரம் வருமாறு:-

சென்னை, எழும்பூர், நேருபூங்கா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 5 இளைஞர்கள், தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி பூண்டி மாதா கோவிலுக்கு சென்றுவிட்டு 8.9.2024 அன்று முற்பகல் திருச்சி செங்கரையூர் கொள்ளிடம் ஆற்றுப் பாலத்தின் கிழக்குப் பகுதியில் குளிப்பதற்காக ஆற்றில் இறங்கிய போது, கிஷோர் (வயது 20) த/பெ. ஜியாவுதீன்; கலைவேந்தன் (வயது 19) த/பெ.சண்முகம்; ஆண்டோ (வயது 21) த/பெ.சார்லஸ்; பிராங்கிளின் (வயது 23) த/பெ.சார்லஸ்; மனோகர் (வயது 19) த/பெ.வெங்கடேசன் ஆகிய ஐந்து நபர்கள் எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். .

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

---

உடல்நலக்குறைவு ஏற்பட்டு - புதுடெல்லி - ‘எய்ம்ஸ்’ மருத்துவமனையில் தீவிர சிகிச்சை!

# மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி - விரைவில் நலம்பெற வேண்டுமென விழைகிறேன்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப்பதிவு!

சென்னை, செப்.12 –

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டு புதுடெல்லி ‘எய்ம்ஸ்’ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதையொட்டி, சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் விரைவில் நலம்பெற வேண்டுமென விழைகிறேன்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:–

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்களின் உடல்நிலை பாதிப்படைந்துள்ளது குறித்து அறிந்து கவலை கொள்கிறேன். அவர் விரைவில் நலம்பெற விழைகிறேன்.

மருத்துவர்கள் குழு அர்ப்பணிப்போடு மேற்கொண்டு வரும் முயற்சிகள் அவர் மீண்டும் பழைய வலிமையோடு திரும்ப உதவும் என நம்புகிறேன்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சியில் நடந்த பேரூர் தி.மு.க. செயல் வீரர்கள் கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்ச்செல்வன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் உள்ளனர்.